**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 84 /2022**

பெயர் : சாவித்திரி P.W.1.

க/பெ. : ரவிச்சந்திரன்

தேதி : 29.08.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

2, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

நான் இந்த வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் ஆவார். 2ம் பிரதிவாதி எனது இளைய சகோதரர் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் ஆவார்கள். 5ம் பிரதிவாதி எனது உறவினரா என்றால் இல்லை. அவர் தாவா சொத்தில் உள்ள வீட்டை 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் திருவிடைக்கழியில் உள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தை வழி பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தந்தையார் தாவா சொத்தை குறித்து எந்த ஏற்பாடும் செய்து வைக்காமல் 03.08.1986 ல் இறந்து விட்டார். தாவா சொத்தில் எனக்கு எவ்வளவு பாகம் கிடைக்கக்கூடியது என்றால் 1/5 பாகம் கிடைக்கக்கூடியதாகும்.